# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>இலங்கை ரூபா 170 பில்லியன் பெறுமதியான போதைப் பொருட்களை கைப்பற்ற இலங்கை கடற்படைக்கு உதவிய இந்திய கடற்படை</u>**

அரபுக் கடலில், இலங்கை கொடியினை தாங்கிய மீன்பிடி படகுகளில் போதைப் பொருட்கள் கடத்தப்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாக இலங்கை கடற்படையினரிடமிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் இக்கப்பல்களை இடைநிறுத்தி சோதனையிடும் ஓர் ஒருங்கிணைந்த நடவடிக்கை மூலமாக இந்தியக் கடற்படையானது துரிதமாக பதிலளித்திருந்தது.

2. குருகிராமில் உள்ள தகவல் பரிவர்த்தனை நிலையத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் இந்திய கடற்படையின் நீண்ட தூர கடல் ரோந்து விமானம் மற்றும் தானியங்கி தொலைதூர விமானம் ஆகியவை மூலம் விரிவான கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இந்திய கடற்படைக்கு சொந்தமான கப்பல் ஒன்றும் இப்பணிகளை துரிதப்படுத்துவதற்காக இணைந்து கொண்டிருந்தது.

3. இலங்கை கடற்படையினரிடமிருந்து தொடர்ச்சியாக கிடைக்கப் பெற்ற தகவல்களுக்கு அமைவாகவும் இந்திய கடற்படையின் விமானங்கள் மேற்கொண்டிருந்த வான்வழி கண்காணிப்பின் அடிப்படையிலும் குறித்த இரு படகுகளும் அடையாளம் காணப்பட்டிருந்தன. இதன் தொடர்ச்சியாக கப்பல் மற்றும் ரோந்து விமானங்கள் மெற்கொண்டிருந்த ஒன்றிணைந்த நடவடிக்கை காரணமாக இரு படகுகளும் 2024 நவம்பர் 24 மற்றும் 25 ஆகிய திகதிகளில் கடற்படையின் விசேட குழுவினரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அண்ணளவாக 500 கிலோ கிராம் போதைப் பொருட்கள் கையகப்படுத்தப்பட்டிருந்தன. அதன் தொடர்ச்சியாக போதைப் பொருள் எதிர்ப்பு நடவடிக்கையினை மேலும் உந்தும் நோக்குடன் மற்றொரு இந்திய கடற்படைக் கப்பல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதனை அடுத்து இரண்டு படகுகளும் சிப்பந்திகளும் மீட்கப்பட்ட போதைப் பொருட்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கடற்பிராந்தியத்தில் வைத்து இலங்கை கடற்படையினரிடம் கையளிக்கப்பட்டன.

4. இந்து சமுத்திர பிராந்தியத்தில் பாதுகாப்பினையும் பாதுகாவலினையும் உறுதிப்படுத்துவதற்கும் பிராந்திய கடல் சார் சவால்களை கூட்டாக எதிர்கொள்ளவும் இரு கடற்படையினரும் கொண்டிருக்கும் ஒன்றிணைந்த உறுதிப்பாட்டை இந்த நடவடிக்கை குறித்து நிற்கின்றது. கடல் சார் கண்காணிப்பு நடவடிக்கையில் இலங்கையின் திறனை அதிகரிப்பதற்காக இந்திய அரசாங்கத்தால் இந்திய கடற்படைக்கு சொந்தமான டோனியர் கடல் கண்காணிப்பு விமானம் இலங்கை கடற்படைக்கு வழங்கப்பட்டிருந்தமை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடத்தக்கதாகும். இது பிராந்தியத்தில் இந்தியாவினை பொருத்தமான பாதுகாப்பு பங்காளியாக மீள உறுதிப்படுத்துவதுடன் இந்திய இலங்கை மக்களுக்காக இரு நாடுகளுக்கும் கடற்படைகளுக்கும் இடையிலான நெருக்கமான பிணைப்பின் மூலமான நன்மைகளுக்கு ஒரு சான்றாகவும் அமைகின்றது.

**********

**கொழும்பு**
**29 நவம்பர் 2024**